# சிலம்பில் எழும் காவிரியும் கங்கையும் – ஒரு நோக்கு

*முனைவர் முருகு தயாநிதி*
முதுநிலை விரிவுரையாளர், தமிழ்த்துறை
தேசிய கல்வி நிறுவகம், கொழும்பு

மலர்: 11
சிறப்பிதழ்: 1
மாதம்: ஏப்ரல்
வருடம்: 2024
P-ISSN: 2321-788X
E-ISSN: 2582-0397
DOI:
https://doi.org/10.34293/sijash.v11iS1-April.7716

## அறிமுகம்

தென்னிந்தியாவில் பவாணி, வைகை, பெண்ணை, பொருணை, பொன்னி ஆகிய நதிகள் புனித நதிகளாக அடையாளமாகின்றன. ஆனால், இளங்கோவடிகள் படைத்த சிலப்பதிகாரத்தில் கங்கை நதியும் காவிரி நதியும் பிரதான இடத்தினைப்பெறுகின்றதன. இந்த நதிகள் வரலாறு. சமயம், த்துவம் கடந்து மேலெழுகின்றன. தமிழர்களுடைய வாழ்வும் வளமும் நதிகளை மையமாகக்கொண்டே முன்கொண்டு செல்லப்பட்டன. இவ்வாறாக நோக்குமிடத்து காவிரி நதி சோழநாட்டைச் சிறப்படையச் செய்தது. வான் பொய்யினும் தான் பொய்யா, மலைத்தலை இய கடற்காவிரி என்று அதன் சிறப்பினைப் பட்டினப்பாலை தருகின்றது. ஊழ்வினை வந்து உருத்தும் காலம் காவிரியைப் பற்றிக் கோவலனும் மாதவியும் பாடிய பாடலால் எழுந்த சந்தேகம் இருவரும் பிரிந்து, மாதவியும் அவள் மகள் மாதவியும் துறவுநிலைக்குச் செல்லக் காரணமாகின்றது. எனவேதான், பெண்களுடைய கற்பின் வலிமையினைக் கூறவந்த இளங்கோவடிகள் அதனைப் காவிரிக்கும் கங்கைக்கும் ஒப்பிட்டுக் காட்டுகின்றார். கண்ணகியை காவிரிக்கும் மாதவியை கங்கைக்கும் உவமிக்கும் இளங்கோவடிகள் கங்கையினையும் காவிரியினையும் பண்பாட்டுத் தளத்தின் முக்கிய இருபெரும் பெண்களாகக் காட்ட முனைவதனை இக்கட்டுரை தன்னிலையில் நின்று ஆராய்ந்துள்ளது.

(அ)

பண்பாடு எனும் சொல் மனிதனோடு மட்டுமே தொடர்புடையது. இதுவே பிற உயிரினங்களில் இருந்து மனிதனைப் பிரித்துக் காட்டுகின்றது. பண்பாடு என்பது அறிவு, நம்பிக்கை, கலை ஒழுக்க நெறிகள் சட்டம், வழக்கம் முதலானவையும், மனிதன் சமுதாயத்தில் ஓர் உறுப்பினராக இருந்து கற்கும் பிற திறமைகளும் பழக்கங்களும் அடங்கிய முழுமைத் தொகுதியாகும் என டைலர் குறிப்பிடுவார். இந்த வகையில் சிலப்பதிகாரத்தில் வருகின்ற கங்கையும் காவிரியும் இரு நதிகளாகும். அவ்வாறெனின் அதனைப் பண்பாட்டுக்குள் அடக்குவது எவ்வாறு என்ற கேள்வி எழலாம். இங்கு கங்கையாக மாதவியும் காவிரியாகக் கண்ணகியும் உவமிக்கப்படுகின்றனர்.

இந்த நிலையில் இந்த இரண்டு நதிகளும் இருபெரும் இலக்கியப் பெண்களாகக் காட்டடப்படுகின்றனர். இந்த நதிகளினை மையமாகக்கொண்டு கற்பு, விட்டுக்கொடுப்பு, வீட்டுவளம், தவறான புரிதல், வாழ்க்கை, கலை, ஊழ்வினை, தலைவனைப் பிரிந்த ஏக்கம், படிப்பினை, துறவு, கனவு முதலிய பெருமைகளை அடையாளப் படுத்தமுடிகின்றது. காவிரி நதி பற்றிய செல்நெறி மனித வாழ்வுடன் தொடர்பு பட்டு நிற்கின்றது. அந்த அடிப்படையில் இலக்கியங்களில் காவிரி என்ற நிலையில் அவற்றினை சிலம்புக்கு முன்னுள்ள காலம், சிலம்புக்குப் பின்னுள்ள காலம் என்ற வகையில் நோக்கமுடியும். சிந்துவெளிகாலத்தில் மொஹஞ்சதாரோ, ஹரப்பா எனும் இரண்டு நகரங்களும், உலகில் புகழ்பெற்ற மொசப்பதேனிய, சுமேரிய நாகரீகங்களும் நதிகளை அண்டியே இருந்திருக்கின்றன. வேத இலக்கியங்களில் நதிகள் பல இருந்தமை பற்றிப் பதிவாகின்றன. வேத கால இந்துக்கள் கங்கைச் சமவெளியில் தோன்றி, மேற்கே சென்று நாகரீகத்தைப் பரப்பியிருக்கின்றனர். நீரைப் புகழ்ந்து பாடும் பாடல் முதலில் பாரதத்தில் பதிவாகி இருக்கின்றன. தென்மங்களில் காவிரி பற்றிய குறிப்பு இடம்பெறுகின்றன. சூரபதுமனால் துரத்தப்பட்ட இந்திரன் சீர்காழியில் ஒரு நந்தவனம் அமைத்து சிவபெருமானை நோக்கி அங்கிருந்து தவம் செய்து வந்தான். ஒருபொழுது மழையில்லாமல் அந்த நந்தவனம் காய்ந்து போனது. அப்போது இந்திரன் விநாயகரை வேண்டினான். விநாயகரும் காகம் வடிவெடுத்துச் சென்று, அகத்தியர் தனது கமண்டலத்தில் அடைத்து வைத்திருந்த காவிரியைக் கவிழ்த்துவிட காவிரி நதி பெருகிச் சோழ நாட்டின் வளத்தை செழிப்படையச் செய்தது என்ற கதை கந்தபுராணத்தில் பதிவாகின்றது. சங்க இலக்கியங்களான பட்டினப்பாலையில் வான் பொய்யினும் தான் பொய்ய மலைத்தலை கடற்காவிரி" என்றும், புறநானூறு ………ஆக்கு பொன்கொழிக்கும் காவிரியே என்றும், பத்துப்பாட்டு சாலி நெல்லின் சிறைகொள்வேலி காவிரிபுரக்கு நாடுகிழவோனே என்றும் பதிவாகின்றன.

சிலம்புக்குப் பின் என்ற நிலையில், மணிமேகலை காவிரி பற்றிய குறிப்பினைத் தருகின்றது. தமிழ் நாட்டு வளத்திற்குக் காரணமாக காவிரி இருப்பதால் அதனைத் தமிழ்ப்பாவை என்றும், காவிரி எப்படிப்பட்ட காலத்தும் நீர்வளம் குன்றுதலில்லை என்றும் அதன் சிறப்பு விளக்கப்படுகின்றது. கம்பராமாயணம் காவிரிநதி பாய்கின்ற சோழ நாட்டைப் போன்ற கோசல நாடு என்றும், பெரியபுராணம் பூமகளின் மார்பில் திகழும் மத்தமாலையாக வர்ணிக்கின்றார். ஒட்டக்கூத்தர் காவிரி நீர்ப் பிரவாகத்தில் கோபங்கொண்ட வாளைமீன்கள் வேலிகளாக அமைந்துள்ள கமுக சோலைகளில் மீதேறித் துள்ளி மேக படலத்தைப் பிளர்ந்து மழைத்துளியோடு இறங்கும் சோழ நாடு என்றும், புகழேந்திப் புலவர் நீர்வளமும் சோறும் பொருந்திய காவிரி என்றும் பலவாறாக காவிரி நதியின் பெருமயினைப் தற்காலக் கவிஞர் வரைப் பலரும் புகழ்ந்து பாடி பதிவிட்டுள்ளனர். இவ்வாறான சிறப்பு வாய்ந்த காவிரி நதியினையும் கங்கை நதியினையும் பண்பாட்டுத்தளத்தில் இளங்கோவடிகள் உயர்ந்த இடத்தில் வைத்து நோக்குகின்றார்.

சோழ மன்னனின் ஆட்சியினை அடியொற்றி கோவலனின் பெருமை பேசப்படுகின்றது. அந்த ஆட்சியின் உயர் நிலையினைப் பேசுவதற்காக சிபிச் சக்கரவர்த்தி மற்றும் மனுநீதி கண்ட சோழன் ஆகியோரின் வரலாற்றினையும் காட்டுகின்றார். சோழ மன்னர்கள் சிறந்த ஆட்சிக்கு அதிபதியானவர்கள். அவர்கள் கங்கை முதற்கொண்டு கடாரம் வரை ஆட்சி செய்தவர்கள். அவர்களுடைய செங்கோல் ஆட்சிபோல் உலகில் வேறெங்கும் இடம் பெறவில்லை. சோழ நாட்டில் சோழ

மன்னனுடைய அரசியல் வல்லமையினால் கங்கையாற்றுப் பகுதி வெல்லப்படுகின்றது. அத்தோடு கங்கை நதி இருக்கும் பிரதேசமோ அவன் ஆட்சிப்புலத்தில் வருகின்றது. அதனால் மன்னன் கங்கை நதியையும் ஆட்சி செய்கின்றான். சோழன் கங்கை நதியை ஆட்சி செய்வதால் காவிரி அவனுடன் வேறுபாடு காட்டுவதில்லை என்று அந்த இரண்டு நதிகளின் பெருமையினைப் பேசுகின்றான். இங்கு காவிரி நதி, கங்கையைக் கைப்பற்ற முன்னரே அவன் ஆட்சிப் புலத்தில் இருக்கின்றது என்பதனைக் கருத்தில் கொள்ளவும். இங்கு இளங்கோ விட்டுக் கொடுப்பின் உயர்ந்த தன்மையினைப் பேசுகின்றார். விட்டுக் கொடுப்பதால் ஒரு விடயம் இலகுவாக நிறை வேறுவதனை கண்ணகியின் வரலாற்றினால் காட்டுகின்றார்.

பெண்ணின் பெருமை வீட்டு வளத்தின் வழி பேசப்படுகின்றது. அவள் பண்பாட்டின் முக்கிய அம்சம். தமிழர்களுடைய பண்பாட்டுத்தளத்தில் ஒரு குடும்பத்திற்குத் தலைப்பிள்ளையாகப் பெண்பிள்ளை இருக்கவேண்டும் என்று பெரியோர்கள் சொல்லக் கேட்டிருக்கின்றோம். பண்பாட்டில் விளக்கேற்றல், வாசல் மெழுகுதல் முதலிய செயற்பாடுகள் இடம்பெற்றால் அங்கு சீதேவி குடியிருப்பாள் என்பார்கள். இவ்வாறான ஒரு கிராமியப் பண்பாட்டம் சத்தின் உயர்நிலையினை கங்கை, காவிரி நதிகள் ஊடாக இளங்கோ காட்டுகின்றார். ஒரு நாடு வளங்கொளிக்க வேண்டுமாக இருந்தால் ஆறும், வீடு அவசியமாகும். நாடு செழிப்பாக இருப்பதற்கு காவிரி மட்டும் போதாது, அதற்குக் கங்கையும் அவசியம். அப்போது அதன் செழிப்பு இன்னும் பன்மடங்கு அதிகரிக்கும். எனவே, சோழ மன்னன் கங்கைப் பகுதியை வென்றது பிழையில்லை என்று இளங்கோ காட்டுவதன் வழி, கோவலன் மாதவியைச் சேர்ந்ததும் தவறில்லை என்கின்றார். இந்தக்கூற்று மனநெருடலை உண்டுபண்ணுகின்றது. கண்ணகியுடன் இருந்த கோவலன் மாதவியுடன் ஊடல் கொண்டால், மாதவியை மனித மனங்களுடன் நடாத்தி இருக்க வேண்டும். மாதவி, கோவலனின் ஆசைக்குத்தீனிபோட்டவள், கண்ணகியால் நிறைவேற்றமுடியாத விடயத்தினைக் கையில் எடுத்து, அவனை பால்நிலைக்கல்வி அடிப்படையில் முழு மனிதனாக்கியவள்.

கோவலன் உயர்ந்த செல்வங்களைக் கொண்டவன் என்பதனை கங்கை மற்றும் காவிரி நதிகளின்வழி காட்டகின்றார். கோவலன்; கண்ணகியைத் திருமணம் செய்தான் என்பது மாதவிக்கும் தெரியாத விடயமாக இருக்கவில்லை. அதனால், மாதவி கண்ணகியினுடைய நிலையினை அறிந்திருக்க வாய்ப்பு அதிகமாக உள்ளது. இதனைப் பயன்படுத்தி மாதவி கோவலனை வளைத்துப் பிடிக்கும் செயலில் இறங்கிருப்பாள். அதற்காக அவள் தனது ஆடல், பாடல் முறையினை இன்னும் வீரியமான முறையில் நிகழ்த்தியிருக்க வாய்ப்புள்ளது. இதில் மயங்கிய கோவலன் மாதவியுடன் இணைந்துகொண்டான். இவ்வாறான விடயங்கள் பண்பாட்டுத் தளத்தில் இடம்பெறுவது புதியவை அல்ல. எனினும், அதனை அணுகிய முறை சிக்கலை உண்டுபண்ணியவண்ணம் உள்ளது.

(ஆ)

மனித வரலாற்றில் பிரிவினை ஒரு நோய் என்பர். அதனை நிவிர்த்தி செய்வது ஒரு சிக்கலான விடயம். கோவலனைக் கண்ணகி பிரிந்திருந்தபோது கண்ணகி துக்கத்துடனே இருந்திருக்கின்றாள். தனது கண்களுக்கு மை பூசவில்லை, காற்சிலம்பு அணியவில்லை என்று இளங்கோ பதிவிடுகின்றார். இது ஒரு சமூக அடுக்கமைப்பில் இடம்பெறுகின்ற செயற்பாடுதான். இன்றும் கணவனைப் பிரிந்திருக்கும் இல்லத்தலைவிகள் தாலி அணிவதில்லை, திலகம் இடுவதில்லை, தலையில் பூ வைப்பதில்லை என்ற நிலையில் தங்கள் வாழ்க்கையினை முன்கொண்டு

செல்கின்றனர். பண்பாட்டுத்தளத்தில் இது ஒரு முக்கியமான குறியீடாகும். இத்தகைய நிலையினை இளங்கோவடிகள் சிறப்பாகக் காட்டுகின்றார். அதாவது, கங்கை நதி கோவலனைக் காணாமல் செழிப்பிழந்து இருந்தது. எனினும், அதனுடைய செயற்பாடு வேறுபாடு காட்டாமல் மக்களுக்காகவே தொடர்ந்தவண்ணம் இருந்திருக்கின்றது.

காவிரி ஆற்றுக்குச் சொந்தக்காரனான சோழன் கங்கையாற்றையோ, குமரி ஆற்றையோ சேர்ந்தாலும், கயலாகிய கண்ணையுடைய காவிரி சோழனுடன் ஊடல்கொள்ளமாட்டாள். அவ்வாறு ஊடல்கொள்ளாதிருப்பதுதான் அவளுக்குக் கற்புடைமையாகும். அதாவது, கற்பையே அணிகலனாய்க் கொண்ட பெண்கள், பிற பெண்டிருடன் தம் கணவர் கூடினாலும் அவர்களை வெறுக்க மாட்டார்கள்;. அப்படி வெறுக்காமல் இருபதும் அத்தகைய பெண்களின் கற்பின் சிறப்பே என்று கோவலன் காவிரியை வாழ்த்திப் பாடுகின்றான். இவ்வாறு உள்ளுறை உவமத்தைக் கொண்டு கோவலன் பாடியது மாதவியின் மனதில் ஆழமான சந்தேகத்தினை ஏற்படுத்தியது. மாதவி சற்றுச் சிந்தித்தவளாய், கோவலனுடைய யாழினைவாங்கி அவளும் பாடுகின்றாள். காவிரிப் பெண்ணே இருமருங்கிலும் வண்டுகள் ரீங்காரம் செய்ய, பூவாடை போர்த்தி கயல் போன்ற உனது விழிகளுடன் நீ அசைந்து வரும் உன்னுடைய அழகே அழகு. உன் கணவன் சோழ மன்னனின் வளையாத செங்கோலின் வல்லமையே அசைந்தாடி வரும் உன் அழகுக்கு அழகு சேர்த்ததோ? என்றும், காவிரிப் பெண்ணே! பூக்கள் நிறைந்த சோலையில் மயில்கள் ஆட, குயில்களோ இசை இசைக்க, மலைகள் இடையே நீ ஒயிலாய் அசைந்து அசைந்து வருகின்றாயே! பகைவர்க்கு அச்சம் தரும் சோழமன்னனின் வேலின் சிறப்பே உன் அசைந்து வந்த நளினத்திற்குக் காரணம் என்பதை நானறிவேன் என்றும், ஆடவரின் ஒழுக்கமே பெண்ணின் கற்பிற்கு அடித்தளம் என்ற அர்த்தத்தில் சோழனின் செங்கோல் வழுவாத சிறப்பே காவிரியின் நடையழகுக்குக் காரணமாயிற்று என்பதைத் பொருளாகக்கொண்டு பாடினாள். இங்கு மறைமுகமாக மாதவியைப் பிழையான கண்ணோட்டத்தில் கோவலன் பார்க்கின்றான். இதனை எந்தப் பெண்ணும் விரும்பமாட்டாள். பிழையானவள் என்று கூறும் கணவனுடன் எவ்வாறு தொடர்ந்து வாழ்வது என்ற சிக்கல்நிலை மாதவிக்குத் தோன்றியிருக்கும். இது மனித இயல்பு. கோவலன் காவிரியாக கண்ணகியை மனதில் கொண்டுள்ளான். ஆனால், மாதவி காவிரியாகத் தன்னை நினைத்துப் பாடுகின்றாள் இதுதான் இந்தக் கதைப் பின்னலாக அமைகின்றது. மாதவி தனது கற்புக்கு அடையாளம் தேடுவதனை நின்கணவன் என்ற சொல் தெளிவுபடுத்தி நிற்கின்றது. ஆனால், கோவலன் மாதவியை விட்டு விலகிச் செல்கின்றான். பண்பாட்டுத் தளத்தில் முதல் மனைவிதான் கணவன் என்ற அந்தஸ்தைப் பெறுவதற்குத் தகுதி உடையவள். இங்கு முதல் மனைவியினை இவன் மறக்காமல் தன்னுடன் வாழ்க்கை நடத்துகின்றான் என்பதனையும் மாதவி அறிவாள். அதனால், அவள் முன்வைத்த கொள்கை நியாயமானது. பண்பாட்டுத் தளத்தில் முதல் மனைவியினை உயர்த்திப் பேசுவதும், இரண்டாவது மனைவி முதல் மனைவிக்கான அந்தஸ்தைத் தேடுவதும், கணவன் தப்பித்துக்கொள்வதற்கு வழி பார்ப்பதும் இன்றுமுள்ள செயற்பாடாக இருக்கின்றது.

கோவலன் இறந்துவிட கண்ணகி தெய்வமாகிவிடுகின்ற செய்தியினை மாதவி அறிகின்றாள். அவள் அவனைப் பற்றியும் தன்னைப் பற்றியும் தனது மகளைப் பற்றியும் பலவாறு சொல்லி துயரடைகின்றாள். துயரத் தின் உச்சநிலையில் பதினொருவயதுடைய

மணிமேகலை எனும் மகளை புத்த மடத்தில் ஒப்படைத்து துறவறம் பூணுகின்றாள். மாணவப் பருவம் கடந்த அவள், கிருகஸ்தனாகி இருந்தபோது அதனைச் சிறப்பாகக் கழிக்காமல் துறவறம் செல்வது வேதனைக்குரியதுதான். எனினும், விதியென்றால் என்னசெய்வது. எவ்வாறான செயற்பாடுகள் இடம்பெற்றபோதும் ஊழ்வினையினை யாராலும் வெல்ல முடியாது என்பதற்கு சிலம்பு சிறந்த உதாரணம். காலமும் நேரமும் வரும்போது அவ்வாறான செயற்பாடுகள் இடம்பெறுகின்றன. அதனால் அவர்கள் பிரிந்து செல்ல வாய்ப்பு ஏற்படுகின்றது. கோவலன் மாதவியைக் கூடியிருந்த காலம் முடிவடைகின்றது. அதனால் பிரிகின்றான். கண்ணகியின் கனவைக் கேட்ட தேவந்தி, நீ முற்பிறப்பில் உன் கணவன் பொருட்டுக் காக்க வேண்டிய நோன்பைச் செய்யத் தவறிவிட்டாய். புகாருக்கு அதனால் உண்டான தீமை விலகட்டும் என்றாள். இவ்வாறாக ஊழ்வினை வந்துறுத்தும் பகுதியாக கங்கையும் காவிரியும் காட்டப்படுகின்றன.

கோவலன் கங்கையினைவிட காவிரி மேல் வைத்துள்ள அன்பு பெரிதானது. தானும் காவிரியும் கெட்டுவிடக்கூடாது என்பதில் கவனமாக இருந்தான். காவிரிக்குப் பாதிப்பு ஏற்பட்டால் நாடே செழிப்பிழந்துவிடும். அது உடைத்துப் பாயுமாக இருந்தால் நாடே அழிந்து விடும் என்ற நிலையில் அவன் எண்ணப்பாடு இருந்தமையினை கங்கையும் அறிவாள். கங்கை நதி காவிரியினைவிட சிறிதானது. ஆனால், ஒப்பிட்டளவில் ஒன்றுதான். கங்கை வளத்தைக் கொடுக்கவேண்டும் ஆனால், காவிரி செழிப்பிழந்து பாதிக்கப் படக்கூடாது என்ற நிலையில் இளங்கோவின் பார்வை இருந்தது. கங்கைக்கு எற்படும் பாதிப்பால் எந்த மாற்றமும் ஏற்படப்போவதில்லை என்ற நிலையில் காவிரி பெரிதாகப் போற்றப்படுகின்றது. கோவலன், காவிரியின் உட்கிடக்கையினை நன்றாகவே அறிந்திருந்தவன் என்பதால் தான் அந்த நதியின் பெருமையினை பேசுகின்றான் என்ற நிலைக்கு வரச் செய்கின்றது.

தேவேந்தி தன்கணவனைப் பிரிந்த நிலையில் சாத்தன் கோவிலுக்குச் சென்று தனக்காகவும் கண்ணகிக்காகவும் வேண்டிக் கொள்கிறாள். பின் கண்ணகியிடம் சென்று நீ உன் கணவனைப் பெறுவாயாக என்று வாழ்த்துகிறாள். அது கேட்ட கண்ணகி, உன் வாழ்த்தின்படி கணவனைப் பெறுவேன். ஆனாலும் என் நெஞ்சு ஏனோ கலங்குகிறது. நேற்று இரவு ஒரு கனவு கண்டேன் என்று தான் கண்ட கனவைச் சொல்லத் தொடங்குகிறாள். இங்கு கண்ணகியும் கனாக் காணுகின்றாள். கோப்பெருந்தேவியும் கனாக் காண்கின்றாள். இருவருடைய கனவின் பலன்களும் கோவலன் கொலை செய்யப்படுவதனையும் பாண்டிநாடே அழிவதனையும் காட்டுகின்றது. கனவு என்பது பொதுவாக எல்லா மக்களாலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட பண்பாட்டுக் கோலந்தான். குறிப்பாக தெற்காசிய மக்கள் மனதில் இன்றும் நீங்காத நினைவுகளாக அது இடம்பிடித்துள்ளது.

கண்ணகியிடம் கேவலன் வருகின்றான். அவன் வருகைக்காக ஏங்கியிருந்த அவள் அவனைஇன்முகத்தோடுவரவேற்கின்றாள். கண்ணகியிடம் வந்த கோவலன் தனக்கு ஏற்பட்ட விபத்துப் பற்றி விலாவாரியாகக் கூறுகின்றான். குறிப்பாகத் தான் வைத் திருந்த செல்வமெல்லாம் இழந்தமை பற்றி மனவேதனையுடன் கூறுகின்றான். அதனைச் செவிமடுத்த கண்ணகி தனது காற்சிலம்பில் ஒன்றைக் கொடுத்து, அவன் மீண்டும்பொருளாதாரத்தினைமேம்படுத்து வதற்கு வாய்ப்பினை ஏற்படுத்துகின்றாள். அதன்படி, சிலம்பினை விற்று பொருளீட்ட பாண்டிநாடு நோக்கிப் பயணமாகின்றான். இந்தப் பயணம் அவனுக்கு இறுதிப்

பயணமாகும். இங்கு நாம் ஒன்றினை அவதானிக்கலாம். காவிரி நதி குறைபாராது உதவுகின்றமையினை இங்கு அடையாளப் படுத்தினாலும் சிலம்பு இறைசக்தி வாய்ந்தது. அதனை விற்றுப் பிழைப்பதற்கு இடமில்லை என்பது பண்பாட்டுத் தளத்தில் உணர்த்தப்படுகின்றது போலும்.

மனிதன் என்பவன் ஒரு விலங்கு அதற்கேற்ப அவனுடைய செயற்பாடுகள் யாவும் அமைகின்றன. கண்ணகியைக் கேவலன் புகழ்ந்து அவளை காவிரி போன்ற பெரும் தன்மைக்கு இட்டுச் செல்கின்றான். இது ஒரு சிக்கலான பார்வையாகும். கண்ணகி கோவலனோடு மாறுபாடு கொள்ளவுமில்லை, ஊடல் கொள்ளவுமில்லை. மாறாகக் மாதவியோடு சேர்ந்த போதும் மனவேறுபாடு கொள்ளவுமில்லை. இந்த நிலையில் கண்ணகி உயர்ந்த இடத்தில் இருக்கின்றாள். ஆனால், கோவலன் கொண்ட ஆசைக்கெல்லாம் இடம் கொடுக்கின்ற கங்கையாகிய மாதவி அவனுடைய பார்வையில் இரண்டாம் இடத்தில் இருக்கின்றாள். இது எந்த வகையில் நியாயமானது என்ற வினா எழுகின்றது. மனைவி என்று மாதவியை ஏற்றுக்கொண்ட கோவலன் இருவரையும் சிறப்பாக நடத்தியிருக்கவேண்டும். அதனை விட்டு, ஒருவரை உயர்த்தியும் இன்னொருவரைத் தாழ்த்தியும் காட்டுவது சமூக அடுக்கமைப்பில் வாழ்வியலுக்குப் பொருத்தமுடையதாகத் தெரியவில்லை.

## முடிவு

தமிழர்களுடைய வாழ்வியலில் பல்வேறு விடயங்கள் சிறப்புப் பெற்றாலும் நதிகள் உயர்ந்த இடத்தில் உள்ளன. நதியில் இருந்து மேகம் நீரைப்பெற்று அது மழையாக வருகின்றது. அத்தகைய நதிகளுள் சிறப்பிடம் பெறுவது கங்கையும் காவிரியும். இந்த இரண்டு நதிகளின் பெருமையினை இளங்கோ மாதவி, கண்ணகியாகக் காட்டுகின்றார். பொதுவாகச் சோழ மன்னனின் பெருஞ் சிறப்பினைச் கூறவந்த இளங்கோ, அதனை மனித வாழ்க்கையுடன் இணைந்தாப்போல் சிறப்பாக முன்கொண்டு சென்று, சிலப்பதிகாரம் எழுந்த நோக்கமான ஊழ்வினை வந்து உருத்தும் என்ற உட்பொருளை இந்த நதிகளினால் நிறைவு செய்கின்றமை புலனாகின்றது. எனவே, ஆய்வு மாணவர்களும், பிறரும் ஒரு இலக்கியம் எழுந்த நோக்கினை மையமாக்கொண்டு அதனை சமூக தன்மைக்கு ஏற்ப ஆழமாகச் சிந்திக்கும் போது, எதிர்பாராத சிறந்த முடிவுகள் பெறப்படுகின்றன. எனவே, எதிர்கால ஆய்வாளர்களுக்கு இந்த ஆய்வுக் கட்டுரை பயனுடையதாக இருக்கும் என்பதோடு, கங்கையும் காவிரியும் தமிழர் பண்பாட்டு அடையாளங்களாக மேலெழுவதனைக் கண்டு கொள்ள முடிகின்றது.

## உஷாத்துணைகள்

1. சீனிவாசன், அ. (2002) சிலப்பதிகாரமமும் திவ்வியபிரபந்தமும் - ஓர் ஆய்வு, பழனியப்பா பிரதர்ஸ், சென்னை.
2. சுப்பிரமணியன், ச.வே. (2002), கானல்வரி, உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை.
3. மதுரை தமிழ் இலக்கிய மின்தொகுப்புத் திட்டம்.